**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## சாதாரணக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 27.07.12 | 1. | கொசுபுகை மருந்து அடிப்பதற்கு மற்றும் Primary Collection பணிக்கு உபயோகப்படுத்தவும் இரண்டு எண்ணம் TATA ACE வாகனம் TATA MOTORS–ன் Authorised Dealer மூலம் வாங்கி உபயோகப்படுத்தி கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எச்4/17102/10 | 140) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 2. | இம்மாநகராட்சியில் இயங்கி வரும் உள்ளாட்சி உடன் நிகழ் தணிக்கை துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் செல்வி . எஸ். அப்துல் கரிமா மாற்று திறன் உடையவர் (உடல் ஊனமுற்றவர்) என்பதால் மாநகராட்சிக்கு செலுத்தவேண்டிய தொழில் வரி தொகைக்கு விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருத்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169 H(c)ன் படி (அரசு ஆணைபடி) மேற்படி செல்வி அப்துல் கரிமா உதவி ஆய்வர் என்பவருக்கு 2012–2013 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** –அனுமதி வழங்கலாம்.<br>அ15/9621 /12 | 141) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3. | இம்மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான மின் கட்டண நிலுவை தொகை இருப்பதாக மின்வாரியத்தால் கடிதம் கொடுத்துள்ளனர். 10–2011 க்கு முன்பு கட்டப்படாமல் நிலுவையில் உள்ள மின்கட்டணங்களை (மீளவிட்டான்,முத்தையாபுரம், அத்திமரப்பட்டி, தூத்துக்குடி ரூரல், சங்கரப்பேரி பகுதிகளுக்கு உரியது) கட்ட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ3/00345/12 | 142) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 4. தற்பொழுது பருவ மழையினை முன்னிட்டும், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காகவும், இம்மாநகராட்சியில் பொது சுகாதார, மலேரியா பிரிவின் மூலம் லோடு ஆட்டோ வாகனத்தை வைத்து கொசு புகை மருந்து அடிக்கும் நடவடிக்கைக்கு வருகின்ற 6 மாத காலத்திற்கு உத்தேச செலவினமாக ரூ 2,00,000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம்.<br>எச்4/9461/2012 | 143) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 5. இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மலேரியா தடுப்பு திட்டத்தின் சார்பாக, தற்பொழுது வர இருக்கின்ற மழைக்காலத்தை முன்னிட்டும் கொசுக்களால் பரவும் டெங்கு காய்ச்சல் நோயினை தடுக்கும் பொருட்டும் வருகின்ற 6 மாத காலங்களுக்கு கொசுக்களை கட்டுப்படுத்தும் வேதி புகை மருந்து தெளிக்க தேவைப்படும் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றை அவசர அவசியம் கருதி வாங்கவும், அதற்கான தோராயமான செலவு தொகை ரூ 1,50,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**–அனுமதிக்கலாம்.<br>எச்4/9462/12 | 144) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 6. இம்மாநகராட்சி பணியாளர் திருமதி. ஜி. கமலா, இளநிலை உதவியாளர் என்பவர் தனது மகளின் திருமணத்திற்கான திருமணக்கடன் முன்பணம் ரூ 10000/– வேண்டி விண்ணப்பம் செய்துள்ளார்.<br>இப்பணியாளர் இதற்கு முன்னதாக திருமணக்கடன் ஏதும் பெறவில்லை. இவருக்கு திருமணக்கடன் வழங்கினால் திரும்ப செலுத்தும் தகுதி உள்ளது. மேற்படியார் திருமணக்கடன் பெறுவதற்கான உரிய சான்றுகள் அனைத்தும் சமர்ப்பித்துள்ளார். எனவே இவருக்கு திருமணக்கடன் தொகை ரூ 10000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு– மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>பி4/8184/12 | 145) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 7. இம்மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம், தற்போது பரவி வருகின்ற டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையாக **அபேட்** என்ற கொசு புழு ஒழிப்பு மருந்து வீடுகள் தோறும் சென்று ஊற்றுவதற்கு, மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களின் 01–06–2012ம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும், பொது மக்களின் நலனை முன்னிட்டும் அவசர அவசியம் கருதியும் தற்காலிக பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் எடுக்கப்பட்டும், கொசு புகை மருந்து அடிக்கப்பட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது. அதற்கான முதல் கட்ட பணி முடிவடைந்த நிலையில் அதற்கான தினக்கூலியாக தொகை ரூ 83,985/– வழங்கியதற்கு பின்னேற்பும், மேலும் நடைபெற உள்ள நாட்களுக்கு உத்தேச செலவினமாக ரூ 7,00,000/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.<br>எச்4/08776/12 | 146) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 8. தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குப்பைகள் அகற்றும் பணிக்கு தேவையான காம்பாக்டர் இரண்டு எண்ணம் வாங்கும் பணிக்கு 25–4–2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு 3 எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் கிடைக்கப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு. | 147) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1) KAM AVIDA MULSHI<br>2) TPS Infrastructure Ltd. New Delhi<br>3) N.S.RAMA RAO Body works, Chennai<br>இதில் KAM AVIDA MULSHI நிறுவனத்தினர் EMD மற்றும் Experience certificate வைக்காதிருந்ததால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டது. மீதமிருந்த 2 ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப விபரங்கள் சரியாக இருந்ததால் அந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் Price bidம் திறக்கப்பட்டது. அதில் இரண்டு நிறுவனத்தாரும் கீழ்க்கண்டவாறு விலைவிகிதம் கொடுத்துள்ளனர். அதன் விபரம் பின்வருமாறு<br>இரண்டு எண்ணம் காம்பாக்டர் வாகனம் சப்ளை செய்ய<br>1) TPS Infrastructure Ltd, New Delhi ரூ. 4228000/– எண்ணம் ஒன்றின் விலை ரூ 2114000/–<br>2) N.S. ராமராவ் பாடி ஒர்க்ஸ், சென்னை ரூ 5818540/– எண்ணம் ஒன்றின் விலை ரூ 2909270/– என விலை விகிதம் கொடுத்துள்ளனர்.<br>இதில் TPS Infrastructure புதுடெல்லி நிறுவனத்தினர் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ளனர். அவர்களிடம் Negotiation கேட்கப்பட்டதில் ரூ 5000/– குறைத்து Negotiation கொடுத்துள்ளார். மேற்படி விலைவிகிதம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ளார். மேற்படி விலைப்புள்ளியை அங்கீகாரம் செய்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பரிசீலித்து அங்கீகரிக்கலாம்.<br>இ1/14912/2011 | |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பொருட்டு விரிவான திடக்கழிவு மேலாண்மை திட்ட அறிக்கை தயாரிக்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.<br>எனவே விரிவான திடக்கழிவு மேலாண்மை திட்டம் வரைவுகள் தயார் செய்ய தொழில்நுட்ப வல்லுநரை நியமனம் செய்ய 17–02–2012ல் ஒப்பந்தப்புள்ளி கோரி தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸில் இந்திய அளவிலும், மக்கள் குரலில் தமிழ்நாடு அளவிலும் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு மெஸ்ஸர்ஸ் அக்கார்டு விளம்பர நிறுவனம், சென்னை ரூ.1,20,977/–க்கு பட்டியல் வழங்கியுள்ளார்கள். தொகையினை வழங்கவும், தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்<br>இ1/14774/2011 | 148) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10. தூத்துக்குடி மாநகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து சுய விருப்பத்தின் பேரில் 01.07.2012 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற திருமதி.கே.ஆறுமுகத்தம்மாள் என்பவர்க்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் மாதம்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகை அதற்குரிய வட்டி மற்றும் மான்யத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னார்க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. | 149) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 1) சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை பிடித்தம்<br>01.03.1986 முதல் 30.06.1998 முடிய மாதம் – ரூ. 2960/–<br>ரூ.20/– வீதம் 148 மாதங்கள்<br>2) அதற்கான வட்டித் தொகை<br>01.03.1986 முதல் 01.07.2012 வரை – ரூ.13766/–<br>3) சிறப்பு சேமநலநிதி மான்யத்தொகை<br>ந.நி.ம.கு.வ(ரு.ப3) துறை அரசாணை – ரூ.10000/–<br>(பத்தாண்டு)எண் 340 நாள்08.08.2008ன்படி<br>––––––––––<br>ரூ.26726/–<br>––––––––––<br><br>மேற்கண்ட தொகை ரூ.26726/– ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னார்க்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்<br>சி1/9938/2012 | |
| | 11. | இம்மாநகராட்சி பாளையங்கோட்டை சாலையில், மாநகராட்சிக்கு சொந்தமான நல்ல தண்ணீர் கால்வாயை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள பெரிய கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தும் பணியை உடனே மேற்கொள்ளும் பொருட்டு மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.572040/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப. எண் 58/12–13 | 150) பதிவு செய்யப்பட்டது |
| | 12. | வல்லநாடு தெப்பம் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 5 போர்வெல்களிலிருந்து குடிநீரை அருகிலுள்ள 10 லட்சம் கொள்ளளவு தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் குழாய் மூலம் இணைக்க தேவையான GI குழாய்கள் பதித்து குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.209486/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப. எண் 57 A/12–13 | 151) பதிவு செய்யப்பட்டது |
| | 13. | வல்லநாடு தாமிரபரணி ஆற்றுப்படுகையில் நீர்வரத்து குறைவினால் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றாக்குறையை சீரமைக்க, வல்லநாடு தெப்பத்தில் புதியராக ஐந்து போர்வெல் அமைத்து அதற்கு தேவையான மின் மோட்டார்கள் பொருத்தி குடிநீர் பற்றாக்குறையை சரிசெய்ய, குடிநீர் அவசரம் அவசியம் கருதி மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.11,49,388/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப. எண் 51 A/12–13 | 152) பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 14. இம்மாநகராட்சி பகுதி கே.வி.கே.நகர் பாளைரோடு மற்றும் பிரையண்ட்நகர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர் கசிவுகளை உடனடியாக சரிசெய்து விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.73681/– செலவு செய்யப்பட்டது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப. எண் 65/12–13 | 153) பதிவு செய்யப்பட்டது |
| | 15. இம்மாநகராட்சி கே.வி.கே.நகர் பாலத்தில் செல்லும் எட்டையபுரம் ரோடு நீர் தேக்க நிலைய பம்பிங் மெயினை, பக்கிள் ஓடை, பாலம் பணிக்காக மாற்றியமைக்க, மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.702622/– செலவு செய்தது, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br><br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப. எண் 81/12–13 | 154) பதிவு செய்யப்பட்டது |
| | 16. இம்மாநகராட்சி கே.வி.கே.நகர் பாலம் அகலப்படுத்தும்பணிக்காக, சுப்பையா பார்க் மேல்நிலைத் தொட்டிக்கு செல்லும் 400 mm இரும்பு குழாயை மாற்றியமைக்கும் பணிக்கு மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.660870/– செலவு செய்தது, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப. எண் 80/12–13 | 155) பதிவு செய்யப்பட்டது |
| | 17. இம்மாநகராட்சி சாமுவேல்புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மேற்கு பகுதி நிலையிலுள்ள கட்டிடத்தில் முதல் தளம் வகுப்பறை கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு பட்டியல் தொகை ரூ.36.60 லட்சத்திற்கு மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப. எண் 95/12–13 | 156) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 18. இம்மாநகராட்சி சிவந்தாகுளம் நடுநிலைப்பள்ளியில் தென்பக்கம் இடிந்த நிலையிலுள்ள சுற்றுச்சுவர் கட்டவும், மற்றும் பள்ளியிலுள்ள கழிவறைகள் சீரமைக்கவும் ஏற்கனவே உள்ள பழைய கட்டிடத்தை பழுதுபார்க்கவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு பட்டியல் தொகை ரூ.25.00 லட்சத்திற்கு மாமன்றத்திற்கு பொருள் வைத்து அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ம.ப. எண் 61/12–13 | 157) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 19. பகுதி II திட்டத்தின் கீழ் 2012–13ம் ஆண்டுக்கு தூத்துக்குடி மாநகராட்சிக்கு மண்டல அலுவலகங்கள் கட்டுவதற்காக அரசாணை எண் 162 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07.06.2012ல் ரூ.100.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாமன்ற தீர்மான எண் 134 நாள் 29.06.2012ல் அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தெற்கு மண்டல அலுவலகம் முத்தையாபுரம் ஜெ.எஸ்.நகரில் அலுவலகம் கட்டுவதிற்கு ரூ.60.00 இலட்சத்திற்கு 05.07.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br>1) திரு.பி.ஜெபர்சன் சாமுவேல்ராஜ், சாயர்புரம், தூத்துக்குடி<br>2) திரு.எஸ்.ரம்போலா,ஒப்பந்தகாரர், தூத்துக்குடி | 158) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டதில் திரு.பி.ஜெபர்சன் சாமுவேல்ராஜ், சாயர்புரம் அவர்கள் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் அன்னாரின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.09% குறைவாக கொடுத்திருந்தார். மேலும் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் ஒப்பந்தகாரர் திரு.பி.ஜெபர்சன் சாமுவேல்ராஜ், சாயர்புரம் அவர்கள் மதிப்பீட்டை விட 0.12% குறைவு (ரூ.5342058/–) கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. திரு. ரம்போலா அவர்கள் ஒப்பந்தப்புள்ளி விதியின்படி சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப உறை ரத்து செய்யப்பட்டது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>ம.ப. எண் 90/12–13 | |
| | 20. | நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் கடித எண் 47923/2011/இ3 நாள் 24.11.2011 அரசு ஆணை எண் 6 நாள் 17.01.2012 மற்றும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 493 நாள் 29.12.2011 ன்படி IUDM திட்டத்தின் கீழ் செய்ய நிர்வாக ஒப்புதல் அளித்ததின் பேரில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டதில் தருவைகுளம் உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு ரூ.39.90 இலட்சத்திற்கு 25.04.2012 அன்று இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒரு உறை முறை வரப்பட்டது. எனவே மேற்படி பணிக்கு 05.07.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>1) திரு. ஜே.சுரேஸ் ஜெயக்குமார், ஒப்பந்தகாரர்<br>2) திரு.ஐ. ஜெயசீலன். ஒப்பந்தகாரர்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஜே.சுரேஸ் ஜெயக்குமார் அவர்கள் தேவையான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்பந்தகாரர் திரு.ஜே.சுரேஸ் ஜெயக்குமார் அவர்களின் விலைப்புள்ளி திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 0.03% குறைவாக கொடுக்கப்பட்டது. மேலும் ஒப்பந்தகாரர் திரு.ஜே.சுரேஸ் ஜெயக்குமார் அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் ரூ.3960040/– மதிப்பீட்டிற்கு 0.05% குறைவாக கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. திரு.ஐ.ஜெயசீலன் அவர்கள் ஒப்பந்தப்புள்ளி விதியின்படி சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப உறை ரத்து செய்யப்பட்டது.<br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>ம.ப..எண் 320/11–12 | 159) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 21. | பகுதி II திட்டத்தின் கீழ் 2012–13ம் ஆண்டுக்கு தூத்துக்குடி மாநகராட்சிக்கு மண்டல அலுவலகம் கட்டுவதற்காக அரசாணை எண் 162 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 07.06.2012 ரூ.100.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாமன்ற தீர்மான எண் 134, நாள் 29.06.2012ல் அனுமதிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வடக்கு மண்டல அலுவலகம் மீளவிட்டான் வி.எம்.எஸ்.நகரில் அலுவலகம் கட்டுவதற்கு ரூ.60.00 இலட்சத்திற்கு 05.07.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டது. | 160) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1) திரு.வி.தங்கராஜ், ஒப்பந்தக்காரர்<br>2)திரு.ஆர்.தங்கராஜ், ஒப்பந்தக்காரர்<br><br>வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை திறக்கப்பட்டது. இதில் திரு.வி.தங்கராஜ் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்திருந்தார். எனவே ஒப்பந்தகாரர் திரு.வி.தங்கராஜ் அவர்கள் விலைப்புள்ளி திறக்கப்பட்டது. இதில் மதிப்பீட்டை விட 9.48 % அதிகம் கொடுத்திருந்தார். மேலும் ஒப்பந்தக்காரரிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் ஒப்பந்தக்காரர் திரு.வி.தங்கராஜ் மதிப்பீடை விட 3.88 % அதிகம் (ரூ.5556510/–) கொடுத்ததை மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. திரு. ஆர்.தங்கராஜ் அவர்கள் ஒப்பந்தப்புள்ளி விதியின்படி சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்காத காரணத்தினால் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் தொழில்நுட்ப உறை தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>**அலுவலகக்குறிப்பு–** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். மேலும் மன்றம் அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதே மதிப்பீட்டுத் தொகையில் மேற்கண்ட பணியினை செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்/<br><br>ம.ப. எண் 91/12–13 | |